ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2269/58 - 2022 මාර්තු මස 04 වැනි සිකුරාදා - 2022.03.04

2269/58 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 04 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி III - காணிகள்

### காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல.: பீ/இ/3/பாதை அபிவி. - 05/அத்பத்.
காணி அமைச்சின் இல.: 4/3/7/2018/HW/463.

பேராதெனிய - பதுளை - சென்கலடி பாதை அபிவிருத்திக்காக பின்வரும் காணிகளில் இருந்து அரசுக்கு எடுத்துக் கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உப பிரிவின் கீழ் நான், இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

ஊவா மாகாணம், மொணராகலை மாவட்டத்தில், பிபிலை பிரதேச செயலகப் பிரிவில், கரகஹவெல கிழக்கு கிராம அலுவலர் பிரிவில், கரகஹவெல கிராமத்தில் அமைந்திருக்கும் மொணராகலை சேர்வையர் ஜெனரால் மூலமாக ஒழுங்குபடுத்தப்பட்ட இறுதி வரைபடத்தின் 573 மற்றும் இல. 104 மற்றும் இல. 105 இல் குறிப்பிடப்படும் சுமார் 0.0093 ஹெக்டயார் மொத்த விஸ்தீரணமுடைய காணித் துண்டுகளின் விபரங்கள்:

01. துண்டு இல. 1526
காணியின் பெயர்: புருத்தகெடியவத்த; உரிமையாளர்: தனியார், டீ. எம். குணரத்ன அனுபவிக்கின்றார்; விஸ்தீரணம்: 0.0073 ஹெக்டயார்.

02. துண்டு இல. 1527
காணியின் பெயர்: புருத்தகெடியவத்த; உரிமையாளர்: தனியார், அமரா தமயன்தி மெணிகே அனுபவிக்கின்றார்; விஸ்தீரணம்: 0.0015 ஹெக்டயார்.

03. துண்டு இல. 1528
காணியின் பெயர்: புருத்தகெடியவத்த; உரிமையாளர்: தனியார், ஆர். எம். சியனேரிஸ் பெர்னான்டோ அனுபவிக்கின்றார்; விஸ்தீரணம்: 0.0005 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில்


*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2022 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 25 ஆந் திகதி மு.ப. 9.30 மணிக்கு பிபிலை பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும்படியும்,

மேலும், அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்ட ஈட்டுத் தொகையையும் அத் தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2022 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 28 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

உபேக்ஷா என். விஜேசிங்ஹ,
பிரதேச செயலாளர்,
பிபிலை.

பிரதேச செயலகம்,
பிபிலை,
2022, பெப்புருவரி 28.

EOG 03 - 0734